SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

## <u>சுருக்கம்</u>

கூட்டுறவுத்துறை - அறிவிப்புகள் 2021-2022 - கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின் மீது மாண்புமிகு அமைச்சர் (கூட்டுறவு) அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு - கூட்டுறவு மருந்தகங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் - அனுமதி அளித்து - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (சிஏ1)த் துறை**

**அரசாணை (டி.) எண். 163** | **நாள்: 27.11.2021.**
**ஸ்ரீ பிலவ வருடம், கார்த்திகை 11,**
**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**படிக்கப்பட்டவை:**

கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கடிதம்,
ந.க.எண்:54720/2021/நுகூ.4, நாள்: 28.10.2021.

----

**<u>ஆணை</u>:-**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25.08.2021 அன்று நடைபெற்ற 2021-2022-ஆம் ஆண்டிற்கான கூட்டுறவுத்துறை மானியக் கோரிக்கையின் (மானியக் கோரிக்கை எண்.12) போது மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள் "கூட்டுறவு மருந்தகங்களின் எண்ணிக்கையை அதிகரித்தல்" குறித்த அறிவிப்பினை (அறிவிப்பு எண்.12) வெளியிட்டுள்ளார்கள்.

2. அவ்வறிவிப்பில், "தமிழ்நாட்டில் கூட்டுறவு துறை மூலம் 303 மருந்தகங்களில் விற்கப்படும் மருந்துகளுக்கு 20 சதவீதம் வரை தள்ளுபடி வழங்கப்படுகிறது. இந்த மருந்தகங்கள் நியாயவிலைக் கடைகள் போல வெளி சந்தைகளில் மருந்து பொருட்களின் விலைகளை கட்டுக்குள் வைத்திருக்க மிகவும் முக்கியமான சமூகப் பங்காற்றுகின்றன. இந்த எண்ணிக்கையை அடுத்த 5 ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 60 கடைகள் வீதம் 600-ஆக உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்", என்றும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

3. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மேலே பத்தி 2-ல் உள்ள மாண்புமிகு அமைச்சர் (கூட்டுறவு) அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் நடவடிக்கையாக, பின்வரும் 75 கூட்டுறவு மருந்தகங்கள் தொடங்குவதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 75 மருந்தகத்திற்கும் இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதில் 29 மருந்தகங்களுக்கு மருந்தாளுநர் நியமனம் செய்து உரிமம் பெறப்பட்டுள்ளதெனவும், மேலும், மற்ற மருந்தகங்களுக்கும் மருந்தாளுநர் நியமனம், உரிமம் பெறுதல் உள்ளிட்ட

நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவித்து, மேற்காண் அறிவிப்பினைச் செயல்படுத்துவதற்கு ஏதுவாக நிர்வாக அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வரிசை எண். | மண்டலத்தின் பெயர் | மருந்தகத்திற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | அரியலூர் | 2 |
| 2 | சென்னை | 4 |
| 3 | கோயம்புத்தூர் | 2 |
| 4 | கடலூர் | 2 |
| 5 | தருமபுரி | 1 |
| 6 | திண்டுக்கல் | 2 |
| 7 | ஈரோடு | 2 |
| 8 | கன்னியாகுமரி | 2 |
| 9 | கரூர் | 2 |
| 10 | கிருஷ்ணகிரி | 2 |
| 11 | மதுரை | 2 |
| 12 | நாகப்பட்டினம் | 2 |
| 13 | நாமக்கல் | 2 |
| 14 | நீலகிரி | 2 |
| 15 | பெரம்பலூர் | 2 |
| 16 | புதுக்கோட்டை | 2 |
| 17 | இராமநாதபுரம் | 2 |
| 18 | சேலம் | 2 |
| 19 | சிவகங்கை | 2 |
| 20 | தஞ்சாவூர் | 2 |
| 21 | தேனி | 4 |
| 22 | திருச்சி | 2 |
| 23 | திருநெல்வேலி | 2 |
| 24 | திருப்பூர் | 2 |
| 25 | திருவள்ளூர் | 2 |
| 26 | திருவண்ணாமலை | 2 |
| 27 | திருவாரூர் | 2 |
| 28 | தூத்துக்குடி | 2 |
| 29 | வேலூர் | 2 |
| 30 | விழுப்புரம் & கள்ளக்குறிச்சி | 2 |
| 31 | விருதுநகர் | 2 |
| 32 | திருப்பத்தூர் | 2 |
| 33 | இராணிபேட்டை | 2 |
| 34 | செங்கல்பட்டு | 2 |
| 35 | தென்காசி | 2 |
| 36 | மயிலாடுதுறை | 2 |
| | **மொத்தம்** | **75** |

4. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் கருத்துருவினை அரசு ஆய்வு செய்து, அதனை ஏற்று, மேலே பத்தி இரண்டில் படிக்கப்பட்ட மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்த ஏதுவாக, மேலே பத்தி 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள 75 இடங்களில் கூட்டுறவு மருந்தகங்களை தொடங்குவதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கு உரிய அனுமதி அளிக்கலாம் என அரசு முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது..

(ஆளுநரின் ஆணைப்படி)

முகமது நசிமுத்தின்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், சென்னை-10.
<u>நகல்</u>
மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர் சென்னை – 9.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம்,
சென்னை-10.
மண்டல இணைப்பதிவாளர், திண்டுக்கல்.
மேலாண்மை இயக்குநர், திண்டுக்கல் மாவட்ட நுகர்வோர்
கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை, திண்டுக்கல்.
கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு(சிஜி)த் துறை,
சென்னை – 9.
இ.கோ./உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.